தமிழ்நாடு அரசு
சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் – தெருவிளக்குகளை பராமரிக்க மின் பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் – புதிதாக தோற்றுவித்தல் – பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.72 நாள். 5.5.1995

படிக்கப்பட்டது

பேரூராட்சிகள் இயக்குநரின் கடித எண். 12518/97/அ1 நாள். 24.9.97 மற்றும் 8.1.98

ஆணை:

பேரூராட்சிகளின் எல்லைக்குட்பட்ட பொதுத் தெருக்களில் மின் விளக்குகள் அமைத்து அவற்றை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது பேரூராட்சிகளின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். துற்போது பேரூராட்சிகளில் தமிழ்நாடு பன்னடைத்தல் மூலம் தெருவிளக்குகள் நிறுவப்பட்டு அதன் பணியாளர்களைக்கொண்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் சிறுசிறு பழுது பார்க்கும் பணிகளுக்கும் கூட பேரூராட்சிகளி மிவாரியப் பணியாளர்களைசார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகள் பெரிதும் பாதிக்கப்டுகிறது. இதைத் தவிர்க்க் பேரூராட்சிகளுக்கென தனியாக மின்பணியாளர்கள் (வயர்மேன்/லைன்மேன்) மற்றும் உதவியாளர்( ஹெல்பர்) பணியிடங்கள் தோற்றுவிக்ககவம், அவற்றில் தகுதி வாய்ந்த பணியாளர்களை பணிமர்த்தவும் பேரூராட்சிகள் இயக்குநர் செயற்குறிப்பு ஒன்று அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. பேரூராட்சிகள் இயக்குநிரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகளுக்கென தனியாக மின்பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க கீழ்கண்டவாறு குறித்த அலகு (ஸ்பெசிபிக் நார்ம்ஸ்) நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 300 தெருவிளக்குகளுக்கு குறைவாக உள்ள பேரூராட்சிகளுக்கு | மின் பணியாளர் (லைன்மேன் அல்லது வயர்மேன்) | 1 |
| 11 | 300 தெருவிளக்குகளுக்கு மேலும் 500 தெருவிளிக்குகளக்கு குறைவாகவும் உள்ள இரண்ண் பேரூராட்சிகளுக்கு | லீன் பணியாளர் (லைன்மேன் அல்லது வயர்மேல் | 1 |
| 111 | 600 தெருவிளக்குகளுக்கு மேற்பட்ட ஒரு பேரூராட்சிக்கு | லீன் பணியாளர் லைன்மேன் அல்லது வயர்மேன் | 1 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 1200 தெருவிளக்குகளுக்கு மேற்பட்ட பேரூராட்சிக்கு | மின் பணியாளர் (லைன்மேன் அல்லது வயர்மேன்) | 1 |
| | | ஊதவியாளர்கள் (ஹெல்ப்பர்கள்) | 2 |
| | | | |

மேற்படி பணியிடங்களில் நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் கீழ்க்கண்ட கல்வித் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

| பணியிடத்தின் பெயர் | கல்வித் தகுதி |
|---|---|
| 1. மின் பணியாளர் (லைன்மேன் அல்லது வயர்மேன்) | ஐ.டி.ஐ பொழில்கல்வி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 2. உதவியாளர் (ஹெல்பர்) | 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

இப்பணியிடங்களுக்கான வயது வரம்பு அரசு பணியிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் இருக்கும்

3. கீழ்க்காணும் நிபந்தமைகளுக்குட்பட்டு மேலே பத்தி 2ல் நீர்ணயிக்கப்பட்டுள்ள அளவு கோலின்படி பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பிற்காக மின் பணியாளர் பணியிடங்கள் ஏற்ப்டுத்த பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

1. நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலின்படி பேரூராட்சிகளில் நியமனம் செய்யப்படவுள்ள மின் பணியாளர்களுக்கான செலவினத்தை பேரூராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதலளித்து சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்றங்களால் தீர்மனாம் நிறைவேற்றப்பட வேண்டும்

2. பேரூராட்சி மன்றம் தீர்மனாம் நிறைவேற்றிய பின்னர் பேரூராட்சிகள் இயக்குநரால் பேரூராட்சியின் நிதிநிலைமையை பரிசீலித்து தேவையான பணியிடக்ஙளைத் தோற்றுவித்து அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

3. இப்பணியிடங்களுக்குத் தேவையான தகுதிவாய்ந்த பணியாளர்கள் மாவட்ட வேலை வாய்ப்பகங்கள் மூலம் பட்டியல் பெற்று விதிமுறைகளை பின்பற்றி நியமனம் செய்யப்பட வேண்டும்

4. இவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்படும் மின் பணியாளர்கள் மற்றும் உதவியளார்கள் முறையே மாதம் ஒன்றுக்கு ரூ. 2000/– மற்றும் ரூ. 1700/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் (செய்யப்பட வேண்டும்.இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டுக்கு 5% கூடுதலாக்கப்படும்.

5. இவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் முதலில் ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டும் நியமனம் செய்யப்பட வேண்டும். பின்னர், ஒவ்வொரு ஆண்டு காலத்திற்கும் இவர்களின் நியமனத்தை புதுப்பித்து, இவர்கல் தொடர்ந்து மூன்று ஆண்டகளுக்கு நியமனம் செய்யப்படவேண்டும். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை

மதிப்பீடு செய்து இவர்களை முறையான ஏதிய ஏற்றமுறையில் நியமனம் செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து தக்க ஆணை தனியாக பிறப்பிக்கும்.

4. ஏற்கனவே பேருராட்சிகளில் போதிய தொழிற்கல்வித் தகதியின்றி தினக்கூலி அடிப்படையில் தற்போது பணிபுரிந்த வரும் 42 தெருவிளக்கு இயக்குபவர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு புதிாக ஏற்படுத்தப்படவுள்ள உதவியாளர் பணியிடங்களில் (ஹெல்பர்கள்) மேற்கண்டவாறு தொகுபூதிய அடிப்படையில் முறையில் நியமனம் செய்யலாம்.

அ. வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியற்றி வரும் தினக்வலிப் பணியாளர்களை முன்னிாமை அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

ஆ. வேலைவாய்ப்பு அலவலகத்தில் பதிவு செய்து ஆனால் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் பணியாற்றி வரும் தினக்கூலிப் பணியாளர்களை அவர்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பதிவின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளல்ாம்.

இ. வேலைவாய்ப்பு அலுவவகத்தில் பதிவு செய்யாமல் தினிக்கூலிப் பணியாளர்களாகப் பணியாற்றும் பணியாளர்களை ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டு அவ்வாறு செய்யப்பட்ட பதிவின் அடிப்படையி. ஆவர்களை எடுத்துக் கொள்ளலாம்.

ஈ. பணியிடங்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள தேவையான கல்வித்தகுதி மற்றும் தொழில் நுட்பத் தகுதி ஆகியவற்றை கொண்டுள்ளவர்கள் மட்டுமே மெற்சொன்ன வழிமுறைகளில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

1. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை மற்றும் நிதித்துறையின் ஒப்புதலுடன் முறையே அதன் அலுவல் சார்பற்ற குறிப்பாணை எண். 87/எஸ். எல்.ஈ/பி/98, நாள். 13.4.98 மற்றும் 1177/எப்எஸ்/பி/98 நாள். 21.3.98ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசுச் செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை/108
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.